பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | கார்த்திகை 06 | ஞாயிற்றுக்கிழமை | 23.11.2025 | அதிர்வு 115

## 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு



இலங்கையில் 10 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப் 06





### இனவாதம், மதவாதத்தைத் தூண்டி

# குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிக்க எந்தத் தரப்பினருக்கும் இடமளியேன்!

### தமிழ், முஸ்லிம் எம்.பிக்களிடம் ஜனாதிபதி உறுதி

ஒருபுறத்தில் இனவாதத்தையும் மறுபுறத்தில் மதவாதத்தையும் தூண்டிக் குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிக்க எந்தத் தரப்பினருக்கும் இடமளிக்கமாட்டேன் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்தார். 02

# கண்டியில் மண்சரிவு! 6 பேர் பரிதாபச் சாவு!!

### நால்வர் காயங்களுடன் மீட்பு



கண்டி, பஹல கடுகண்ணாவ பகுதியில் பிரதான வீதியோரத்தில் இருந்த வியாபாரநிலையமொன்றுமீது பாரியகற்பாறையுடன் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் 6 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

நேற்று காலை 8.45 மணியளவில் பாரிய பாறையொன்றுடன் மண்மேடு சரிந்தது. இதன்போது வீடும், உணவகமும் முற்றாகச் சேதமடைந்தன.

மண்ணுக்குள் சிக்குண்டவர்களில் ஒருவரின் சடலம் ஆரம்பத்தில் மீட்கப்பட்டது. மேலும் நால்வர் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு மாவனல்லை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

மண்ணுக்குள் சிலர் புதையுண்டு இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்ட நிலையில் 10 மணி நேர மீட்புப் பணியின்போது மேலும் ஐவர் சடலங்களாக 06




சமூக ஊடகங்களில் குசும்புத்தனம் பண்ணி, களேபரம் செய்து, அதன் மூலம் மலிவான விளம்பரம் பெற்று, நாடாளுமன்றத்துக்குள் போக முடியும் என்று தந்தி/ரித்திரத்தை கண்டுபிடித்த பிரகிருதிகள், இப்போது நாடாளுமன்றத்தில் தாம் ஆற்றும் உரைகளையும் நடவடிக்கைகளையும் அதே சமூக ஊடகங்களுக்கு 'கிளாப்' அடிப்பதற்காக முன்னெடுக்கின்றமை அப்பட்டமாக வெளித் தெரிகின்றது.

ஒருபுறம் நாடாளுமன்ற சிறப்பு உரிமை என்ற பாதுகாப்பை வைத்துக்கொண்டு மோசமான சொல்லாடல்களில், கீழ்த்தரமாக ஆள்களை வசை பாடுவது வழமையாகி விட்டது. அதைப் பார்த்து கைதட்டி ஆரவாரிக்கும் ஒரு கூட்டம் தனக்கு வாக்களிக்கும் என்ற நம்பிக்கையில் இவ்வாறு அடாவடித்தனம் பண்ணுகின்றார்கள். நாடாளுமன்றத்தில் இல்லாதவர்களுக்கு – தங்கள் பக்கத்தில் உள்ள நியாயத்தை எடுத்துக் கூற வாய்ப்பற்றவர்களுக்கு – எதிராக நாடாளுமன்றத்தில் முழு அபவாதம் பேசுவது அநாகரிக அரசியலாகும். 06

# யாழில் போதை மாத்திரைகளுடன் நான்கு இளைஞர்கள் நேற்று கைது!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ். பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 42 போதை மாத்திரைகளுடன் 4 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருநகரைச் சேர்ந்த 22 வயதுடைய இரு இளைஞர்களும், 24 வயதுடைய இரு இளைஞர்களும் நேற்று இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்

சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் இன்று யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## குறுக்கு வழியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த ஆண்டு டிசம்பரில் நடைபெறவிருக்கும் இலங்கையர் தினத்துக்காகத் தற்போது திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்து எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் நேற்று பிற்பகல் நடத்திய கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், ரிஷாத் பதியுதீன், செல்வம் அடைக்கலநாதன், எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், கவீந்திரன் கோடீஸ்வரன், காதர் மஸ்தான், துரைராசா ரவீகரன், பழனி திகாம்பரம், வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா மற்றும் வைத்தியர் இளையதம்பி சிறிநாத் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

அனைத்து மத மற்றும் கலாசார அடையாளங்களையும் மதித்து, இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் சுதந்திரமாக வாழ வாய்ப்பு இருக்க வேண்டும் என்றும், நமது நாடு எந்தவொரு இனவாத வலையிலும் சிக்குவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்றும் இதன்போது மேலும் தெரிவித்த ஜனாதிபதி, அதற்காக அரசு முன்னெடுக்கும் வேலைத்திட்டத்துக்கு அனைவரும் ஆதரவளிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதன் மூலம் நல்லிணக்கத்துடன் கூடிய இலங்கையை உருவாக்கும் தொலைநோக்குப் பார்வையுடன், அனைத்து சமூகங்களையும் ஒன்றிணைத்து இலங்கையர் தினம் கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக அனைத்து சமூகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துகளும் பரிந்துரைகளும் இங்கு வினவப்பட்டதுடன், இந்த நடவடிக்கைகள் குறித்த கலந்துரையாடலில் பங்கேற்ற அனைத்து பிரதிநிதிகளாலும் இந்த நிகழ்ச்சித் திட்டம் பெரிதும் பாராட்டப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும், அனைவரும் ஒன்றிணைந்து செயற்படக்கூடிய வகையில் நிகழ்ச்சிகளையும் செயற்றிட்டங்களையும் உருவாக்குமாறு ஏற்பாட்டுக் குழுவுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.















# திருமலையில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு சம்பூர் கலாசார மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்றது. சம்பூர் ஆலங்குளம் மாவீரர் நாள் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு இந் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 800 க்கும் மேற்பட்ட மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வின் ஆரம்பத்தில் மாவீரர்களின் பெற்றோர்கள் சம்பூர் பிள்ளையார் ஆலய முன்றுலில் மாலை அணிவிக்கப்பட்டு, மேளதாளங்களோடு,மலர்தூவி விழா மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

யுத்தத்தில் உயிர் நீத்தவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி சுடரேற்றப்பட்டு ஒரு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. அடுத்து மாவீரர்களின் பெற்றோர்கள் தென்னை மரக்கன்றுகள். அன்பளிப்புப் பொருள்கள் என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த கௌரவிப்பு நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்,ச்குடும்ப உறுப்பினர்கள். அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.








# கிழக்கில் ஒருங்கிணைந்த நேர அட்டவணையை சீர்குலைக்கவே சுழற்சி முறை நேர அட்டவணை

## பணிபகிஷ்கரிப்பில் குதிப்போம் என தனியார் பஸ் உரிமையாளர்கள் எச்சரிக்கை

(கனகராசா சரவணன்)

கிழக்கு மாகாண சபை எல்லைக்குட்பட்ட கல்முனை, அம்பாறை, அக்கரைப்பற்று ஆகிய இடங்களில் இருந்து திருகோணமலைக்கு அரச மற்றும் தனியார் பஸ்கள் ஒருங்கிணைந்த நேர அட்டவணை தயாரித்து அதன் பிரகாரம் கடந்த 13 வருடங்களாக சேவையில் ஈடுபட்டு வருகிறோம். அதனை சீர் குலைக்க சுழற்சி முறை நேர அட்டவணை என்ற போர்வையில் எடுக்கப்படும் செயற்பாட்டை நிறுத்தாவிட்டால் 25 ஆம் திகதி பணி பகிஷ்கரிப்பில் ஈடுபடுவோம் என தென் கிழக்கு கரையோர பிரதேச தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு கோப் இன் விடுதியில் நேற்று சனிக்கிழமை தென்கிழக்கு கரையோர பிரதேச தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த ஊடக மாநாட்டில் கலந்து கொண்ட சங்கத்தின் தலைவர் எச்.ஐ.எம்.எஸ்.ஏ. மௌலானா, செயலாளர் எம்.எஸ். பைருஸ் மற்றும் பஸ் உரிமையாளர்கள் கூட்டாக இணைந்து இந்த எச்சரிக்கை விடுத்தனர்.

கிழக்கு மாகாண சபை எல்லைக்குள் கல்முனை – திருகோணமலை, அம்பாறை – திருகோணமலை, அக்கரைப்பற்று – திருகோணமலை ஆகிய மூன்று வீதிகளில் சேவையில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பஸ்கள் இருசாராரும் ஒருங்கிணைந்த நேர அட்டவணை தயாரித்து அதன் பிரகாரம் கடந்த 13 வருடங்களாக சேவையில் ஈடுபட்டு வருகிறோம்






இந்த வீதியில் பஸ்களுக்கு மத்தியில் எதுவிதமான போட்டித் தன்மையே, விபத்துக்களோ, குழறுபடிகள் – குழப்பங்களோ இல்லை. இவ்வாறு ஒரு சந்தர்ப்பத்தில் அதிகார சபையின் தலைவர், பணிப்பாளர் நாயகம், திட்டமிடல் பணிப்பாளர் ஆகிய மூன்று பேரும் இந்த ஒருங்கிணைந்த நேர அட்டவணைப்படி சேவையில் ஈடுபட்டு வரும் தனியார் பஸ் உரிமையாளர்களுடைய எதுவித வேண்டுதலும் இன்றி இந்த நேரங்களை சீர் குழப்புவதற்கு எடுக்கும் முயற்சி அனைத்து பஸ் உரிமையாளர்களிடம் சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு இந்த இந்த நேர அட்டவணை மாற்றுவதன் ஊடாக அரசாங்கத்துக்கு, அதிகாரசபைக்கு அல்லது பயணிக்கும் பயணிக்கு எதுவிதமான நன்மைகளும் இல்லை. அவ்வாறு நன்மைகள் இருக்குமாக இருந்தால் அது சம்பந்தமாக பஸ் உரிமையாளர்களுடன் கலந்து ஆலோசித்து முடிவுகள் எடுக்க முடியும்.

இவ்வாறு எதுவித நன்மையும் இல்லை என இருந்தும் எதற்கு இந்த மூன்று அதிகாரிகளும் இந்த நேர அட்டவணையை சீர் குலைப்பதற்கு முயற்சிக்கின்றனர் என்ற விஷயத்தை ஜனாதிபதி, கிழக்கு மாகாண ஆளுநர் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

வருகிற 25 ஆன் திகதி ஒருங்கிணைந்த நேர அட்டவணைக்கு புறம்பான சுழற்சிமுறை நேர அட்டவணை சம்பந்தமான கலந்துரையாடி அது சம்பந்தமாக அறிவுறுத்துவதற்கு ஒரு கூட்டத்தை அதிகார சபையின் தலைவர் தயார்படுத்தியுள்ளார்.

எனவே இந்த சுழற்சிமுறை நேர அட்டவணையை உடனே நிறுத்தி வழமைபோல ஒருங்கிணைந்த நேர அட்டவணைப்படி சேவையில் ஈடுபட ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அதேவேளை இந்த அதிகார சபையின் தலைவர், பணிப்பாளர் நாயகம், திட்டமிடல் பணிப்பாளர் ஆகிய மூன்று பேரும் சுழற்சி முறை அட்டவணை என்ற செயற்பாட்டை நிறுத்தாவிட்டால் நாங்கள் அனைவரும் எதிர்வரும் 25 ஆம் திகதி கிழக்கு மாகாண ஆளுநர் காரியாலயத்திற்கு முன்னால் தனியார் போக்குவரத்து பஸ்களை நிறுத்தி பகிஷ்கரிப்பில் ஈடுபடுவோம். – என்றனர்

# பருத்தித்துறை வைத்தியசாலையில் பதற்றம் அம்புலன்ஸ் சாரதி, பொலிஸார் மீது தாக்குதல்

## கத்தியுடன் வந்த நபர் வெறியாட்டம்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குள் கத்தியுடன் அத்துமீறி நுழைந்த நபர் ஒருவர், அம்புலன்ஸ் சாரதி மீதும், வைத்தியசாலையில் பாதுகாப்புக் கடமையில் இருந்த பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளார். இதனால், அங்கு பெரும் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது.




இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

உயிர்மாய்ப்பதற்கு முயற்சித்த 21 வயதுடைய இளைஞர் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்நிலையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு வைத்தியசாலைக்குள் வந்த நபர் ஒருவர், மேற்படி இளைஞரின் விவரத்தைக் கூறி அந்த இளைஞரைப் பார்ப்பதற்கு வழிகாட்டுமாறு அம்புலன்ஸ் சாரதி ஒருவரைக் கேட்டுள்ளார்.

அவரின் நடவடிக்கைகளில் சந்தேகமடைந்த அம்புலன்ஸ் சாரதி, வழிகாட்ட மறுத்துள்ளார். இதையடுத்தே, அம்புலன்ஸ் சாரதி மீது அந்த நபரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

விடயத்தை அறிந்து அவரைக் கைது செய்வதற்காகப் பொலிஸார் சென்ற போது, அவர் பொலிஸார் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதையடுத்து, அந்த நபர் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டார்.

பருத்தித்துறைப் பொலிஸாரிடம் அவர் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி சந்தேகநபர் கத்தியொன்றை உடைமையில் மறைத்து எடுத்து வந்தமை தெரியவந்துள்ளது.

இதனால், அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறும் இளைஞர் மீது தாக்குதல் நடத்துவதற்காக அவர் வந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். மேலதிக விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் நபர்களால் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பவர்கள் மீது தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றனமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை நகரத்தில் மாட்டுடன் மோதிய விபத்தில் மோ.சைக்கிளில் வந்த இளைஞனின் கால் முறிவு!

## மாநகரசபை அசண்டையீனம் எனக் குற்றச்சாட்டு

(எஸ்.கீதபொன்கலன்)

கட்டாக்காலிகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்காமல் கவனயீனமாக இருக்கும் திருகோணமலை மாநகர சபையின் போக்கால் நகரில் உடள்துறைமுக வீதியில் விபத்து நேர்ந்து இளைஞனுக்கு கால் முறிவு ஏற்பட்டது. மாடு ஒன்று,உயிருக்கு போராடுகின்றது.

திருகோணமலை உள்துறைமுக வீதியில் நேற்று இரவு சுமார் 7.30 மணியளவில் வீதியால் சென்ற மாட்டுடன் இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞனுக்கு கால் முறிவு ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். கன்றுடன் பயணித்த பசு உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறது.

விபத்துக்கு முழுப்பொறுப்பும் மாநகர சபையையே சாரும். எனவே பாதிக்கப்பட்டவர்கள் மாநகரசபைக்கு எதிராக வழக்கு தொடரக்கூடிய வாய்ப்பு சட்டத்தில் உள்ளது. இந்தப் பகுதியில் மாலையளவில் பல மாடுகள் நடமாடித் திரிகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினமும் இந்தப் பகுதியில் விபத்து ஏற்பட இருந்ததாகவும், தெய்வாதீனமாக அது தவிர்க்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

மாநகரசபையின் கவனயீனத்தால் இளைஞனின் கால் முறிந்துள்ளதுடன் பசுக்கன்று தனது தாயை இழக்கும் சூழலும் ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை நகர் பகுதியில் தொடர்ச்சியாக மாடுகளின் நடமாட்டத்தை அவதானிக்க முடிகின்றது. இனியும் மாநகரசபை இது குறித்து நடவடிக்கை எடுக்காமல் பொறுப்பின்றி செயற்படுமாக இருந்தால் உயிர்ப்பலிகளைத் தவிர்க்க முடியாது என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.





# நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற சுற்றிவளைப்பில் பலர் கைது

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் நேற்று வெள்ளிக் கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 29,188 பேர் பரிசோதிக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் 611 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், 17 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 315 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 154 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 16 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 13 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,496 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதைச் செய்பவர்கள், துணிவிருந்தால் நாடாளுமன்றுக்கு வெளியில் வந்து அப்படி நடந்தால் நீதிமன்றங்களில் சரியான பாடம் படிப்பார்கள்.

நாடாளுமன்ற கவசத்திற்குள், சமூக ஊடகங்களுக்கு மூன்றாந்தரப் பாணியில் விருந்து படைத்து ஆரவாரம் பண்ணும் பண்பியல்புக்கு உதாரணத்துக்கு ஒன்று.

பூநகிரியில் சூரிய சக்தி மின உற்பத்திக்கான திட்டம் ஒன்று ரணிலின் காலத்தில் பிரேரிக்கப்பட்டது. அதனை ஒட்டி, பெயர் குறிப்பிடாமல், ஆனால் சொல்லடுக்குகள் மூலம் தமிழரசு யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்டங்களுக்கான நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனை சுட்டி, அபவாதக் கருத்து ஒன்றை ஊசி மருத்துவர் அர்ச்சுனா நாடாளுமன்றத்தில் ஆரவாரமாக முன் வைத்தார். இந்தத் திட்டத்துக்காக சிறிதரன் 40 மில்லியன் ரூபாவும் அவரது மகன் சாரங்கள் 30 மில்லியன் ரூபாவும் கையூட்டு வாங்கினார்கள் என்ற சாரப்பட வைத்தியரின் உரை படு பீற்றலாக அமைந்தது.

தமது குற்றச்சாட்டை நிரூபிக்க ஏதோ ஆதாரத்தை சமர்ப்பிக்கின்றார் என சில கட்டுத் தாள்களையும் அவர் தூக்கிக் காட்டி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அந்த உரையையும் அந்த சமர்ப்பணத்தையும் பார்த்தால் ஏதோ வலிமையான ஆதாரங்களை அவர் ஒப்படைத்து விட்டார் என்பது போல இருக்கும்.

தேடிப் பார்த்தால் அது அந்த பூநகரி திட்டத்துக்கு அந்த நிறுவனம் இன்னொரு நிறுவனத்துடன் செய்த வேலை ஒப்பந்தத்தின் ஒரு போட்டோ பிரதி மட்டும் தான். அதில் சிறிதரன் சம்பந்தமாகவோ, மகன் சம்பந்தமாகவோ அல்லது அவர்கள் கையூட்டு நிதி பெற்றார்கள் என்று சாட்டப்படும் குற்றங்கள் சம்பந்தமாகவோ எந்த தகவலோ, வரியோ, கருத்தோ இல்லை. அந்தத் திட்டத்துக்கான வேலை ஒப்பந்தம் பற்றிய விடயங்கள் சுமார் 30 – 35 பக்கங்களில் இருக்கின்றன. அதன் பிரதியை அப்படியே நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, அதை ஏதோ பெரும் ஊழலுக்கான ஆதாரம் என்று மக்களின் காதில் பூச்சுற்றிப் போய் இருக்கிறார் மருத்துவர் அர்ச்சுனா.

அந்த ஒற்றைகளை வைத்து, அதில் ஏதேனும் ஊழல் தொடர்பான அடிப்படை விடயம் கூட – தகவல் கூட – இல்லாத நிலையில், ஒன்றுமே செய்ய முடியாது.

ஆனால், அந்த ஆரவார எடுப்பைப் பார்த்து நம் மத்தியில் உள்ள தற்குறி ஆதரவாளர்கள் மெச்சி, மகிழ்வார்கள்.

உண்மையில் இத்தகைய விடயங்கள் தொடர்பில் நியாயமான – சட்ட ரீதியான – ஆதாரங்களை மருத்துவர் அர்ச்சுனா என்று இல்லை, யாரேனும் தந்தாலும், அவற்றின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து அவற்றை அம்பலப்படுத்த பொறுப்புள்ள ஊடகம் என்ற முறையில் நாம் தயாராகவே இருக்கின்றோம்.

ஆனால் சமூக ஊடகங்களில் நாடாளுமன்றத்தில் அர்ச்சுனா பிய்த்துதறும் உரைகளைப் பார்த்து ஏதோ வலிமையான ஆதாரத்தை அவர் கொடுத்து விட்டார் என்று மக்கள் நம்ப வேண்டியதுதான். மக்களை முட்டாள்களாக்கி அரசியல் செய்வதுதானே நமது அரசியல்வாதிகளின் ஒரே மூலதனம்....!



## யாழ்ப்பாணத்தில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடி உயிர் நீத்த மாவீரர்களின் பெற்றோர், உறவினர், உரித்துடையோரைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ். நாவாந்துறை சென். நீக்கிலஸ் சனசமூக நிலையத்தில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது மாவீரர்களின் பெற்றோர், உறவினர், உரித்துடையோரினால் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு மாவீரர்களின் திருவுருவப் படத்துக்குச் சுடரேற்றி மலர் மாலை அணிவித்து அஞ்சலி செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவீரர்களின் உறவுகளுக்கு மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன.



## கண்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மீட்கப்பட்டனர்.

அந்தப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வந்த தேடுதல் நடவடிக்கை நேற்று இரவு 7 மணியுடன் நிறுத்தப்பட்டது.

இராணுவம், தீயணைப்புப் படையினர் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

கடும் மழை பெய்து வந்த நிலையிலேயே இந்த மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தின்போது உணவகத்துக்குள் பலர் இருந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரும் உள்ளடங்குகின்றார் எனத் தெரிய வருகின்றது. இவர் மாவனல்லை பகுதியைச் சேர்ந்தவராவார்.

## 10 மாவட்டங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பட்டுள்ளது.

அதன்படி கண்டி, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, அம்பாந்தோட்டை, காலி, களுத்துறை, மாத்தறை மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.



# நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் சமூக ஊடக பதிவு தொடர்பில் அவதானம்

இலங்கையின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கக்கூடிய வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் சமூக ஊடகப் பதிவுகளை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம் தீவிரமாகக் கண்காணித்து வருவதாக உறுதி செய்துள்ளது.

சுற்றுலாத்துறையைப் பாதிக்கக் கூடிய இவ்வாறான செயல்களுக்கு எதிராக எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பணியகத்தின் தலைவர் புத்திக ஹேவாவசம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில், வெலிகம சுற்றுலா கடல் பகுதியில் ஓர் உள்ளூர் நபருடன் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணி ஒருவர் சண்டையிடும் காணொலியை சமூக ஊடகத்தில் பதிவிட்ட சம்பவத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

முறையான முறைப்பாட்டின் பேரில், தொடர்புடையசமூகஊடகத்தளங்களுக்கு அறிவிக்கப்பட்டு, அந்தக் காணொலியை நீக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், அண்மையில் இணையத்தில் பகிரப்பட்ட வெளிநாட்டுப் பெண் ஒருவர் பாலியல் ரீதியில் துன்புறுத்தலுக்கு ஆளானமை குறித்த மற்றுமொரு காணொலியானது, நாட்டின் சுற்றுலாத் துறையில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் குறித்தும் பணியகம் கவலை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் சுற்றுலாத் துறைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் நடந்துகொள்ளும் எந்தவொரு வெளிநாட்டவர் மீதும் எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

# நாட்டின் பல பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை




நாட்டில் நிலவும் தொடர்ச்சியான கடும் மழை காரணமாகப் பல பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கையை நீர்ப்பாசனத் திணைக்களம் விடுத்துள்ளது.

களு கங்கையின் கிளை ஆறான குடா கங்கையின் மேல் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கணிசமான அளவு மழை பதிவாகியுள்ளதுடன், மேலும் மழை தொடர்ந்து வருகிறது.

இதன்காரணமாக, நேற்று மாலை 3 மணிமுதல் அடுத்த 48 மணி நேரத்திற்கு அதன் தாழ்நிலப்பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, புளத்சிங்கள, மதுராவெல, மற்றும் பாலிந்த நுவர ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் அமைந்துள்ள குடா கங்கை மற்றும் மகுரு கங்கையை அண்டிய தாழ்நில பகுதிகளில் சிறு வெள்ளம் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, அந்தத் தாழ்வான பகுதிகள் வழியாகச் செல்லும் வீதிகள் நீரில் மூழ்கும் தீவிர அபாயம் உள்ளதால், அந்த பகுதி மக்கள் மற்றும் வாகன சாரதிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்படுமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# முதலில் ஒன்றுபடுங்கள்!

தற்போதைய அரசை வீழ்த்துவதற்கு என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட எதிரணிகளின் பேரணியும் கூட்டமும் பின்னர் அரசின் பொய்ப் புரட்டுக்களையும் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாதமையையும் அம்பலப்படுத்தும் நிகழ்வாக மாற்றப்பட்டது.

ஆனாலும் இந்த ஆட்சியை வீழ்த்துவது குறித்து அங்கு பேசப்படாமல் தவிர்க்கப்படவில்லை.

நுகேகொடையில் நேற்று முன்தினம் கூட்டப்பட்ட இந்தக் கூட்டத்தில் ஆயிரக் கணக்கில் மக்கள் திரண்ட போதிலும், அது இந்த ஆட்சிக்கு சவால் விடுக்கும் ஓர் எச்சரிக்கை முன்னறிவித்தலைத் தருவதாக அமையவிலை என்பது தான் உண்மை.

கூட்டத்தின் பிரதான ஏற்பாட்டாளரான மொட்டுக் கட்சியின் நாமல் ராஜபக்ஷ, கிடைக்கின்ற முதல் சந்தர்ப்பத்தில் இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கான முயற்சியை முன்னெடுப்போம் என்று சூளுரைத்திருக்கின்றார்.

இந்த அரசாங்கம் நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவியோடு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மையுடன் வலிமையான நிலையில் இருக்கின்றது.

அதன் ஐந்து வருட ஆட்சிக் காலத்துக்கு முன்னர் அதனை வீழ்த்துவதற்கான சந்தர்ப்பம் எப்படி உருவாகும் என்பது கேள்விதான்.

சுமார் 159 அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஸ்திரமான அரசை வீழ்த்துவதாயின் ஆளும் தரப்புக்குள் முரண்பாடும் பிரிவினையும் வர வேண்டும்.

அல்லது கோட்டாபய ராஜபக்ஷவின் அரசை வீழ்த்தியமை போன்று அறகலய போராட்ட மாதிரியான மக்கள் கிளர்ச்சி உருவாக வேண்டும். அத்தகைய மக்கள் கிளர்ச்சி உருவாவதற்கான நெருக்கடி நிலைகள் நாட்டில் தென்படுவதாக இப்போதைக்கு இல்லை.

மறுபுறத்தில் ஆளும் தரப்பைப் பிளவுபடுத்தும் முரண்பாடுகள் ஏற்படக்கூடிய அரசியல் கள நிலைமையும் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்தப் பின்புலத்தில் ஆட்சியை கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்தில் வீட்டுக்கு அனுப்புவோம் என்று நாமல் ராஜபக்ஷவின் சூளுரை இந்த அரசின் ஆட்சி காலம் ஐந்து வருடங்கள் முடியும் வரை கிட்டப் போவதில்லை என்றே இன்றைய நிலையில் தோன்றுகின்றது.

அதுவும் வலிமையான ஆட்சித் தரப்புக்கு எதிரான எதிர்க்கட்சிகளின் ஐக்கியம் சாத்தியமில்லாத இந்த நிலையில், இந்த அரசை வீட்டுக்கு அனுப்பும் நாமல் போன்றோரின் சிந்தனைகள் வெறும் பகல் கனவாகவே தோன்றுகின்றன.

ஆகவே, ஆளும் தரப்பை கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்தில் வீட்டுக்கு அனுப்பும் பகல் கனவு பற்றி பேசாமல், அதற்கு முன்னர் கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சிகளை ஒன்றிணைப்பது குறித்து நுகேகொடை பேரணி ஏற்பாட்டாளர்கள் கவனம் செலுத்துவது நல்லது. அதுதான் எதிரணிக்கு மிக முக்கியமான விடயமாகும். அதைச் செய்யாமல் ஆளும் தரப்பை வீட்டுக்கு அனுப்புவது பற்றி பேசுவதில் அர்த்தமே இல்லை.

# பஸ்களில் பயணச்சீட்டு வழங்காத நடத்துனருக்கு எதிராக நடவடிக்கை



பஸ்களில் பயணிப்போருக்கு பயணச்சீட்டுக்களை விநியோகிக்காத நடத்துனர்களின் சேவை, 07 நாள்களுக்கு இடைநிறுத்தப்படும் என மேல் மாகாண வீதி போக்குவரத்து அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் 01 ஆம் திகதி முதல் இந்த நடவடிக்கை அமுல்படுத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், சம்பந்தப்பட்ட பஸ்ஸின் பயணத்தைஇரண்டுநாள்களுக்குநிறுத்தி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, செல்லுபடியாகும் பயணச்சீட்டுக்களைவைத்திருக்காதபயணிகளுக்கு விதிக்கப்படும் அபராதமுறை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பருத்தித்துறை நகரில் இடம்பெற்ற விபத்தில் பரீட்சைக்கு சென்ற திரும்பிய மாணவர் காயம்



பருத்தித்துறை நகரில் இடம்பெற்ற விபத்தில் பரீட்சைக்கு சென்று விட்டு திரும்பிய மாணவர் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை நண்பகல் இடம்பெற்றுள்ளது.

க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றி விட்டு மோட்டார் சைக்கிளில் பயணித்த மாணவன் ஆட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளான நிலையில், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## Maximum Retail Prices of Medicines

| No | Generic Name | Dosage Form | Strength | Brand Name | Manufacturer, Country | Market Authorization Holder | Maximum Retail Price (per unit) (LKR) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Aspirin | Tablet (Delayed release) | 75 mg | A PRIN 75 | Ace Healthcare, Sri Lanka | Ace Healthcare, Sri Lanka | 5.85/Tablet (Blister) 4.50/Tablet (Bulk) |
| 2 | Paclitaxel(Protein bound particles) | Suspension for injection | 100mg/Vial | AB-PACLI 100 | Beta Drugs Ltd., India | Adora Ceylon Pvt,ltd | 26,332.29 /Vial |
| 3 | Acetylcysteine | Infusion | 200 mg/mL | Acetylcysteine | Mercury Laboratories, India | Yaden International | 228.28/ 5 mL |
| 4 | Acetylcysteine | Infusion | 200 mg/mL | Acetylcysteine | Mercury Laboratories, India | Yaden International | 451.61/ 10 mL |
| 5 | Azithromycin | Tablet | 500 mg | ACTISAN 500 | Sands active, Sri Lanka | Sands active, Sri Lanka | 90.00/ Tablet (Blister) 81.58/ Tablet (Bulk) |
| 6 | Adalimumab | Injection | 40 mg | ADALIRED | Reliance Life Sciences, India. | ABC Pharma Services | 40,716.00/ 0.8mL Pre-filled syringe |
| 7 | Adapalene | Cream | 2% | ADAPCO | Atco Laboratories, Pakistan | Morison Ltd. | 787.09/ 15 g |
| 8 | Apixaban | Tablet | 5 mg | ADVAXABAN | Martin Dow Pakistan | Emerchemie NB | 40.70/ Tablet |
| 9 | Amiodarone | Tablet | 100 mg | AMIDOR 100 | Celogen, Sri Lanka | Celogen, Sri Lanka | 38.73/ Tablet |
| 10 | Amikacin | Injection | 250mg/mL | Amikacin | Mercury Laboratories, India | Yaden International | 325.00/ 1mL |
| 11 | Amikacin | Injection | 250mg/mL | Amikacin | Mercury Laboratories, India | Yaden International | 382.50/ 2mL |
| 12 | Amikacin | Injection | 250 mg/ 1 mL | AMIKAN | Kelun Lifesciences, Sri Lanka | Kelun Lifesciences, Sri Lanka | 373.33/ 1mL |
| 13 | Amikacin | Injection | 250 mg/ 1 mL | AMIKAN | Kelun Lifesciences, Sri Lanka | Kelun Lifesciences, Sri Lanka | 425.00/ 2 mL |

# 350 வகையான மருந்துகளுக்கு கடுமையான விலைக் கட்டுப்பாடு

சுமார் 350 வகையான மருந்துகளுக்கு கடுமையான விலை கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குமுறைகளை விதிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய நடவடிக்கையின் மூலம் நுகர்வோர் நியாயமான விலையில் மருந்துகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த புதிய நடவடிக்கை இலங்கையின் மருந்து விநியோகத் துறையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் குறிக்கின்றது.

இந்தத் தீர்மானத்தின் காரணமாக, சந்தையில் தற்போதுள்ள பல மருந்துகளின் விலைகளைக் கணிசமாகக் குறைக்க முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நியாயமற்ற இலாபத்தைப் பெறுவதைத் தடுப்பதற்கும், தன்னிச்சையான விலையேற்றங்களைத் தவிர்ப்பதற்கும் இந்த நடவடிக்கை உதவியுள்ளது.

அத்துடன், அத்தியாவசிய மருந்துகளைப் பொதுமக்கள் இலகுவாகப் பெற்றுக்கொள்வதை உறுதி செய்வதற்காக மருந்து வர்த்தகம் தொடர்ந்து கண்காணிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விலை கட்டுப்பாட்டு முறை நாட்டின் மருந்துக் கொள்கையைப் பலப்படுத்துவதற்கான ஒரு முக்கிய படியாகும் என்றும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில், குறைக்கப்பட்ட மருந்துகளின் விலைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.



# தெதுறு ஓயா நீர்த்தேக்கத்தின் 4 வான்கதவுகள் திறக்கப்பட்டன

தற்போது நிலவும் அதிக மழையின் காரணமாக, தெதுறு ஓயா நீர்த்தேக்கத்தின் 4 வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் உயர்ந்துள்ளதாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதுடன், இதனையடுத்து தெதுறு ஓயா நீர்த்தேக்கத்தின் கீழ்ப்பகுதியில் வசிக்கும் மக்கள் விசேட அவதானத்துடன் இருக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, தப்போவ நீர்த்தேக்கத்தின் 6 வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன எனவும், பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.



# யாழ். பழைய பூங்காவின் உயிரைப் பறிக்கும் மூடத்தனமே விளையாட்டு அரங்கு அமைப்பு

## சூழலியலாளர் ஐங்கரநேசன் காட்டத்துடன் எச்சரிக்கை

தொன்மை வாய்ந்த யாழ்ப்பாணப் பழைய பூங்காவில் புதிதாக உள்ளக விளையாட்டு அரங்கு ஒன்றை அமைப்பதற்கான பணிகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

யாழ். நகரில் அமைந்துள்ள பல நூறாண்டுகள் ஆயுளையும் தாண்டிய மரங்களைக்கொண்ட ஒரேயொரு பூங்காவாக விளங்கிய பழைய பூங்கா ஏற்கனவே, தொலைநோக்குச் சிந்தனையின்றி அமைக்கப்பட்ட கட்டடங்களால் குற்றுயிரும் குலையுயிருமாகச் சிதைந்து போயுள்ளது. இந்நிலையில், தற்போது புதிதாக உள்ளக விளையாட்டு அரங்கை அமைப்பது பழைய பூங்காவின் உயிரை ஒரேயடியாகப் பறிக்கும் ஓர் மூடத்தனமான செயல் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

பழைய பூங்காவில் புதிதாக உள்ளக விளையாட்டு அரங்கை அமைப்பதற்கான அத்திவாரப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், இதுதொடர்பாக பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

யாழ்ப்பாணப் பழைய பூங்கா யாழ்ப்பாணத்தின் ஒரு தொன்மைவாய்ந்த அடையாளம் மாத்திரம் அல்ல, வாகன நெரிசல் மிக்க யாழ். நகரின் கரிக்காற்றை உறிஞ்சிச் சுத்தம் செய்யும் ஓர் பிரம்மாண்டமான காபன் வடிகட்டியாகவும் செயற்பட்டு வந்துள்ளது. ஆனால், தொலைநோக்கற்ற, நீடித்து நிலைக்கும் பண்பற்ற அபிவிருத்தித் திட்டங்களால் தற்போது பழைய பூங்கா கட்டடக் காடாக மாறியுள்ளது. ஆளுநர் செயலகம், நிலஅளவைத் திணைக்களம், நீர்வழங்கல் வடிகால் சபை, தேர்தல் திணைக்களம், கூடைப்பந்தாட்டச் சம்மேளனம், தொல்லியல் திணைக்களம் மற்றும் யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் ஆகியனவற்றின் ஆக்கிரமிப்பில் பூங்கா ஏற்கனவே மூச்சுத்திணறிக் கொண்டிருக்கிறது.

ஆங்கிலேயர் காலத்தில் மீளப்பெறமுடியாத அழியா நன்கொடையாக வழங்கப்பட்ட 9.67 ஹெக்டயர் நிலப்பரப்பைக் கொண்ட பழைய பூங்காவில் தற்போது எஞ்சியுள்ளது 5.19 ஹெக்டயர் நிலப்பரப்பு மட்டுமே ஆகும். மீதமாகவுள்ள இப்பகுதியில் கூடைப்பந்தாட்ட மைதானம், வலைப்பந்தாட்ட மைதானம் மற்றும் வாகனத்தரிப்பிடத்துக்கு ஒதுக்கப்பட்ட நிலம் ஆகியனவற்றை உள்ளடக்கி 12 பரப்பளவில் உள்ளக விளையாட்டரங்கு அமைக்கப்படவுள்ளது. இது இயங்கத் தொடங்கும்போது பார்வையாளர்களின் வருகையின் பொருட்டு சூழ உள்ள பகுதியும் அபகரிக்கப்படும் அபாயமே உள்ளது. இந்த அழிப்பை அங்கே அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்காவால் ஒருபோதும் சமம் செய்யமுடியாது.

பழைய பூங்காவில் விடுதலைப்புலிகளின் காவல் துறை நிலைகொண்டிருந்த காலப்பகுதியில் அவர்களால் பூங்காவின் மரங்கள் அழிக்கப்படவில்லை. நிரந்தரக் கட்டுமானப் பணிகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. வடக்கின் தற்போதைய ஆளுநர் நா. வேதநாயகன் யாழ். மாவட்டச் செயலராகப் பதவி வகித்தபோது புதிய கட்டுமானப் பணிகள் எதனையும் பழைய பூங்காவில் அனுமதிப்பதில்லை என்ற தீர்க்கமான முடியவை எடுத்திருந்தார். இப்போது, அவர் ஆளுநராகப் பதவி வகிக்கும்போது புதிது புதிதாகக் கட்டடங்கள் முளைக்க ஆரம்பித்துள்ளன. ஆளுநர் உடனடியாக இதனைத் தடுத்து நிறுத்தி, உள்ளக விளையாட்டு அரங்குக்கு மாற்று நிலத்தை ஏற்பாடுசெய்ய முன்வரவேண்டும். – என்றும் தெரிவித்துள்ளார்.

# 27 இல் மாவீர செல்வங்களிற்கு மதிப்பளிக்க பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் அழைப்பு

மாவீர செல்வங்களிற்கு மதிப்பளிக்கும் வகையில் எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை பூநகரி பிரதேசத்தில் வர்த்தக நடவடிக்கைகள் அனைத்தையும் இடைநிறுத்தி நினைவேந்தலில் பங்கெடுக்க அனைவரிற்கும் பூநகரி பிரதேச சபை தவிசாளர் அழைப்பு விடுத்துள்ளார்.

அன்றைய தினம் பிரதேசசபை ஆளுகைக்குட்பட்ட சந்தைகள் இயங்காதென தெரிவித்துள்ள தவிசாளர் கால்நடை கொல்களங்கள் மூடப்பட்டிருப்பதுடன் இறைச்சிக்கடைகளும் முடங்கியிருக்குமென விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அதேவேளை அன்றைய தினம் மதுச்சாலைகள் மற்றும் தவறணைகள் உள்ளிட்ட வர்த்தக நிலையங்களும் மூடி ஒத்துழைப்பு வழங்குவதுடன் பணியாளர்கள் துயிலுமில்லங்களிற்கு செல்ல ஒத்துழைப்பு வழங்கக் கோரியுள்ளார்.

குறிப்பாக களியாட்ட நிகழ்வுகள் அனைத்தையும் நிறுத்தி பொது மைதானங்களில் போட்டிநிகழ்வுகளை தவிர்க்கவும் அவர் கோரியுள்ளார்.

அத்துடன் முழங்காவில் மற்றும் வாடியடி நகரப்பகுதிகளில் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கவும் அழைப்பு விடுத்துள்ளார்.

இதனிடையே பூநகரியின் முழங்காவில் துயிலுமில்லம் இடித்தழிக்கப்பட்ட நிலையில் வடகிழக்கிலுள்ள துயிலுமில்லங்களில் முன்னுதாரணமாக மீள புனரமைக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.



# புதுச்சேரியில் எஸ்.ஐ.ஆர். பணியை கைவிட கோரி இளைஞர் காங்கிரஸினர் முற்றுகை போராட்டம்!

புதுச்சேரி மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி (எஸ்.ஐ.ஆர்) அனைத்து சட்டப்பேரவை தொகுதிகளிலும் நடைபெற்று வருகிறது. இதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியை ரத்து செய்ய கோரி இளைஞர் காங்கிரஸ் சார்பில் 22 ஆம் திகதி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி நேற்று ஆர்ப்பாட்டம் நடத்த காங்கிரஸ் மாநில தலைவர் வைத்திலிங்கம் எம்.பி, முன்னாள் முதல்வர் நாராயணசாமி, வைத்தியநாதன் எம்.எல்.ஏ, இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஆனந்தபாபு, மகிளா காங்கிரஸ் தலைவி நிஷா மற்றும் நிர்வாகிகள் பலர் வி.வி.பி. நகர் அருகே திரண்டனர்.

பொலிஸாரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே வீதியின் நடுவே தடுப்பு ஏற்படுத்தி இருந்தனர். வி.வி.பி. நகர் அருகே ஒன்றுகூடிய காங்கிரஸார் அங்கிருந்து ஊர்வலமாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கி முற்றுகையிட வந்தனர்.

அப்போது, இந்திய தேர்தல் ஆணையரின் உருவ பொம்மைக்கு மாலை அணிவித்து சவப்பாடையில் வைத்து தூக்கி வந்தனர். அதனை கண்ட பொலிஸார் சவப்பாடையை அப்புறப்படுத்த முயன்றனர். இதனால் பொலிஸாருக்கும், காங்கிஸாருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

இருப்பினும், அவர்களிடமிருந்து பொலிஸார் சவப்பாடையை கைப்பற்றி அப்புறப்படுத்தினர். தொடர்ந்து, காங்கிரஸ் தலைவர்கள் மற்றும் இளைஞர்கள் காங்கிரஸார் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட வந்தபோது, அவர்களை ஏற்கெனவே அமைக்கப்பட்டிருந்த தடுப்புகள் மூலம் பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

இருப்பினும் காங்கிரஸ் தொடர்ந்து முன்னேறிச் செல்ல முயன்ற நிலையில் மீண்டும் பொலிஸாருக்கும், காங்கிரஸாருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. மேலும் காங்கிரஸார் சாலையில் அமர்ந்து மத்திய பா.ஜ.க. அரசுக்கு எதிராகவும், பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா மற்றும் இந்திய தேர்தல் ஆணையருக்கு எதிராகவும், வாக்கு திருட்டில் ஈடுபடும் பிரதமர் மோடி பதவி விலக கோரியும், வாக்காளர் சிறப்பு தீவிர சிறத்த பணியை ரத்து செய்ய வேண்டுமெனவும் கோஷங்களை எழுப்பினர்.

இதையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்ட மாநில தலைவர் வைத்திலிங்கம், முன்னாள் முதல்வர் நாராயணசாமி, வைத்தியநாதன் எம்எல்ஏ உள்ளிட்டோரை பொலிஸார் கைது செய்தனர்.

இந்தப் போராட்டம் காரணமாக வழுதாவூர் வீதியில் ராஜீவ் காந்தி சதுக்கம் முதல் வி.வி.பி. நகர் வரை வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்பட்டிருந்தனர். இதனால் கோரிமேடு செல்லும் வீதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

# மதுக்கடையை மூடுவேனென விஜய் கூட சொல்லவில்லை

## சீமான் தெரிவிப்பு

போத்தலுக்கு 10 ரூபா என பாட்டு பாடும் தம்பி விஜய் கூட ஆட்சிக்கு வந்தால் மதுக்கடையை மூடுவேன் என சொல்லவில்லை என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆதங்கம் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம் கூத்தன்குழியில் நாம் தமிழர் கட்சி சார்பில் கடலம்மா மாநாடு அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து பணகுடி பகுதியில் மேய்ச்சல் நில உரிமையை நிலைநாட்ட மேற்கு தொர்ச்சி மலைப் பகுதியில் மாடு மேய்க்கும் போராட்டத்தை நடத்த அவர் திட்டமிட்டிருந்தார்.

ஆனால், இந்தப் போராட்டத்துக்கு பொலிஸ் அனுமதி அளிக்கவில்லை. திருநெல்வேலியில் சீமான் தங்கியிருந்த கட்சி நிர்வாகி திருமண மண்டபத்தின் முன்பு பொலிஸார் குவிக்கப்பட்டனர். இதனால் அவர் போராட்டம் நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.


இந்நிலையில், நேற்று பிற்பகலில் செய்தியாளர்களிடம் சீமான் கருத்து தெரிவிக்கையில்,



“தி.மு.க, அ.தி.மு.க, பா.ஜ.க, காங்கிரஸ் ஆகியவற்றுக்கு இடையே எந்தக் கொள்கை மாற்றமும் இல்லை. போத்தலுக்கு 10 ரூபா என பாட்டு பாடும் தம்பி விஜய் கூட ஆட்சிக்கு வந்தால் மதுக்கடையை மூடுவேன் என சொல்லவில்லை.

பிஹாரில் பெண்களுக்கு 10 ஆயிரம் ரூபா கொடுத்து பா.ஜ.க. வெற்றியை பெற்றுவிட்டது. அதுபோல் தமிழகத்தில் பொங்கலுக்கு 3 ஆயிரம் ரூபா கொடுக்கலாம். ஏன் 5 ஆயிரம் ரூபா கூட கொடுக்கலாம்.

வாக்கிற்கு பணம் கொடுக்காத மாற்று அரசியல் தமிழகத்தில் தேவை.” என்று அவர் தெரிவித்தார்.





# நோபல் பரிசை வாங்க சென்றால் நடவடிக்கை; மரியா கொரினாவுக்கு வெனிசுலா அரசு மிரட்டல்

நோபல்பரிசைவாங்கமரியாகொரினா மச்சாடோசென்றால்அவர்மீதுநடவடிக்கை எடுக்க அரசு திட்டமிட்டுள்ளது.

பல நாடுகளுக்கு இடையேயான போரை நிறுத்தியதால் தனக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

ஆனால் வெனிசுலா எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சாடோவை அமைதிக்கான நோபல் பரிசுக்கு தேர்வு செய்ததாக நோபல் கொமிட்டி அறிவித்தது.

நோபல்பரிசுக்குதேர்வுசெய்யப்பட்டவர்களுக்கு, ஆல்பிரட் நோபலின் நினைவு தினமான டிசம்பர் 10 ஆம் திகதி அன்று தங்கப் பதக்கம், சான்றிதழ் மற்றும் 11 மில்லியன் ஸ்வீடிஸ் கிரௌன்ஸ் (இந்திய மதிப்பில் 10.41 கோடி ரூபா) ஆகியவை நோர்வேயில் வைத்து வழங்கப்பட உள்ளது.

இந்நிலையில், மரியா கொரினா மச்சாடோ நோர்வேவிற்கு நேரில் சென்று நோபல் பரிசை வாங்குவதில் சிக்கல் எழுந்துள்ளது.

அவர் மீது சதி, வெறுப்பைத் தூண்டுதல், பயங்கரவாதம் ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு பல்வேறு வழக்குகள் பதியப்பட்டு, விசாரணை நடைபெற்று வருகிறது.

நோபல் பரிசு வாங்குவதற்காக அவர் வெனிசுலாவை விட்டு வெளியே சென்றால் தப்பியோடியவராக கருதப்படுவார் என வெனிசுலாவின் அட்டர்னி ஜெனரல் தாரெக் வில்லியம் சாப் எச்சரித்துள்ளார்.

# காசாவை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய வான் வழித் தாக்குதலில் 9 பேர் மரணம்















காசாவை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 9 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலுக்கும், ஹமாஸுக்கும் இடையில் நீடித்த 5 வார போர் நிறுத்தம் தற்போது தகர்ந்துள்ளது.

காசாவை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் குறைந்தது 9 பேர் வரை கொல்லப்பட்டனர் என காசாவின் உள்ளூர் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் ஹமாஸ் போர் நிறுத்த ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறியதாக இஸ்ரேல் குற்றம் சாட்டியுள்ளது.

நிலைமைமோசமடைந்ததேகாசாவில் நடந்த மூன்று வான்வழித் தாக்குதல் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் தொகை அதிகமான ரிமால் பகுதியில் வாகனத்தை இலக்கு வைத்து இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 5 பேர் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்துள்ளனர் என உள்ளூர் மருத்துவ வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

# கிளிநொச்சி மக்களுக்கு சுத்தமான குடி தண்ணீரை வழங்குவதற்கு ஒரு சிறுகுழுவே தடையாக உள்ளதாம்

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார் ஊடக மாநாட்டில் குற்றச்சாட்டு




கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு சுத்தமான குடி தண்ணீரை வழங்குவதற்கு மாவட்டத்தில் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு துணை போகின்ற அரசியல் தரப்பு ஒன்றின் ஆதரவுள்ள சிறு குழுவினர் தடையாக உள்ளனர். இதனால் இம்மாவட்ட மக்கள் மிகவும் ஆபத்தான நோய் மற்றும் நெருக்கடிகளுக்கு முகம்

கொடுக்கின்றமையோடு, மாவட்டத்தின் அபிவிருத்திக்கும் தடை ஏற்பட்டுள்ளது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவக்கட்சியின் பொதுச் செயலாளருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று அவரது அலுவலகததில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைத்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில. –

கிளிநொச்சி மக்களுக்கு குடி தண்ணீரை வழங்குவதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கிளிநொச்சி குளத்திலிருந்து நீரைப் பெற்று சுத்திகரித்து வழங்கி வருகிறது. ஆனால் கிளிநொச்சி குளமானது கிளிநொச்சி நகரின் அனைத்துக் கழிவுகளும் வந்து சேர்கின்ற குளமாக காணப்படுவதோடு, ரை ஆறு வழியாக இரத்தினபுரம் பாலம் ஊடமாக கிளிநொச்சி வைத்தியசாலை கழிவுகள் உட்பட மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கின்ற பல கழிவுகள் கிளிநொச்சி குளத்தை வந்தடைகின்றன. அத்தோடு கிளிநொச்சி குளம் மற்றும் அதன் நீரேந்து பகுதிகளை ஆக்கிரமித்து குடியேறியுள்ளவர்களின் மலக்கழிவுகளும் கிளிநொச்சி குளத்திற்கு வருகிறது.

இதன் காரணமாக கிளிநொச்சி குளம் கழிவுகள் நிறைந்த குளமாக காணப்படுகிறது.

இந்தக் குளத்திலிருந்தே நீர் பெறப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு குடி தண்ணீருக்கு விநியோகிப்படுகிறது. ஆனால் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரிடம் காணப்படுகின்ற நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் இக் கழிவுகள் அனைத்தையும் முழுமையாக சுத்திகரிக்கும் இயலுமை காணப்படவில்லை. அதனால் கடந்த சில வாரங்களாக கிளிநொச்சி மக்களுக்கு விநியோகிக்கப்பட்ட குடி தண்ணீரின் தரம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டிருந்தமை நாம் அனைவரும் அறிந்த விடயமாகும்.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பிரதேசங்களில் நிலத்தடி நீர் மாசுபட்டுள்ளது. அதிகளவு விவசாய நடவடிக்கைகளில் அதிகளவு இராசயனங்களின் பயன்பாட்டால் இவ்வாறு நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அந் நீரை குடி தண்ணீராகப் பயன்படுத்துகின்ற மக்களில் பலர் நிரந்தர சிறுநீரக நோய் தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர். முக்கியமாக கண்டாவளை பிரதேசத்தில் மூன்று வீதமான மக்களுக்கு சிறுநீரக பாதிப்பு நோய் ஏற்பட்டுள்ளது. இதற்கு பிரதான காரணம் குடி தண்ணீர் எனக் கூறப்படுகிறது. எனவே இந்த மக்களை பாதுகாப்பது நம் அனைவரினதும் கடமையாகும். இந்த பிரதேசங்களுக்கு சுத்தமான குடி தண்ணீரை வழங்கவேண்டிய பொறுப்பு மாவட்டத்தின் உள்ள பொறுப்பு வாய்ந்த அனைவருக்கும் உண்டு ஒரு சிலரின் தனிப்பட்ட நலன்களுக்காக ஆயிரக் கணக்கான பொது மக்களின் சிறுநீரகங்களை அடைவு வைக்க முடியாது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 24 வீதமான மக்களுக்கு குடி தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆதனை சுத்தமான, பாதுகாப்பான நீராக விநியோகிக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். இதற்கு முன் எவர் தடை ஏற்படுத்தினால் அவர்களை கருத்தில் எடுக்காது மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்க பொறுப்பு வாய்ந்தவர்கள் முன்வர வேண்டும். அத்தோடு பரந்தன் முதலீட்டு ஊக்குவிப்பு வலயம், கௌதாரி முனை சுற்றுலாத்தளம் என்பவற்றுக்கு நீர் வசதியை வழங்கின்ற போதே, எமது மாவட்டம் அபிவிருத்தியை நோக்கிச் செல்லும். அறிவியல் நகர் பல்லைகழகம், இரண்டு பெரிய ஆடைத்தொழிற்சாலைகள், ஆனையிறவு உப்பளம் போன்ற வற்றுக்கும் தடையின்றிய நீர் விநியோகம் அவசியம். இவை மாவட்டத்தின் அபிவிருத்தி சார்ந்த விடயம். எனவே இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு கிளிநொச்சி மாவட்டத்தின் சுத்தமான குடி தண்ணீர் விநியோகத்தை சம்மந்தப்பட்டவர்கள் உறுதி செய்ய வேண்டும்.

கிளிநொச்சி கழிவுகள் தேங்கி நிற்கின்ற குளமான கிளிநொச்சி குளத்திலிருந்து நீரைப் பெறுவதனை நிறுத்தி இரணைமடுக்குளத்திலிருந்து நேரடியாக நீரைப் பெற்று, சுத்திகரித்து, கிளிநொச்சி மக்களுக்கு பாதுகாப்பான சுத்தமான குடி தண்ணீர் விநியோகத்தை உறுதிப் படுத்துமாறு கோருகின்றேன். இரணைமடுக் குளத்தை மாவட்டத்தில் உள்ள ஒரு சிறு குழுவினர் ஏக போக உரிமை கோர அனுமதிக்க முடியாது அவர்களின் நலன்களுக்காக மாவட்ட மக்களின் நலன்களை பகடையாக்க முடியாது. இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளம் என்பது சட்டரீதியான பதிவுக்குட்பட்ட ஒரு அமைப்பு அல்ல என்பது தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஊடாக ஊடகவியலாளர் ஒரு தகவலைப் பெற்று வெளிப்படுத்தியிருகின்றார். எனவே சட்டரீதியற்ற ஓர் அமைப்பின் கருத்துக்களுக்காக கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு பாதுகாப்பற்ற குடி தண்ணீரை விநியோகிக்க அனுமதிக்க முடியர்து. எனவே இதற்கு விரைவில் உரிய தீர்வு காணப்படவில்லை எனின் பாதிக்கப்பட்ட மக்களுடன் வீதியில் இறங்க வேண்டி ஏற்படும். – எனவும் அவர் தெரிவித்தார்.




# மாவீரர்களை போற்றுவோம்...!

மாவீரர் நினைவு வாரம் நவம்பர் 21 முதல் ஆரம்பமாகிய நிலையில் மாவீரர் நினைவாக இக் கவிதை பிரசுரிக்கப்படுகிறது.

தமிழினத்தின் விடிவிற்காக
மறைந்த வீர மறவர்களை
நினைவு கூரும் வாரம்
நவம்பர் 21 – 27

கார்த்திகை 27 தமிழ்
மக்களின் விடிவுக்காய்
உயிர் நீத்த தியாக
வேங்கைகளின் நாள்

சிங்கள பேரினவாத
அடக்கு முறைகளை
உடைத்தெறிந்து வீர
காவியமானவர்கள் நாள்

தலைவன் காட்டிய வழியில்
படையெடுத்துச் சென்று
நஞ்சுப் குப்பிகளை சுமந்து
களமாடியவர்கள் நாள்

தமிழினத்தின் விடிவிற்காக
தமிழன் என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா – என
உயிர் கொடுத்தவர்கள் நாள்

மாவீரர்கள் வித்தாகி
விதையாகிப் போனாலும்
அவர்களை நினைத்து
பூச்சொரிந்து கண்ணீர் மல்கி
நினைவு கூறுகின்றோம்

விருட்சமாக தமிழர்
மனங்களில் வாழும்
அந்த தெய்வங்களை
இந்நாளில் போற்றுவோம்!



சிவகுமார்
தாயினி



# பாலம்போட்டாறு பிரதேசத்தில் காட்டு யானைகள் அட்டகாசம்!

(ஏ.எச்.ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பாலம்போட்டாறு கிராம சேவகர் பிரிவில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக அப் பிரதேச மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

இந்தக் கிராமத்தில் மாலை வேலையில் யானை ஊருக்குள் புகுந்து பயிர்களை துவம்சம் செய்து விட்டு செல்வதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பாலம் போட்டாறு, பத்தினிபுரம், இக்பால் நகர் கிராம மக்களின் அன்றாட தொழிலாக தோட்டச் செய்கை,விவசாயம் என்பன உள்ளன.

காட்டு யானைகளின் தொடர் அட்டகாசத்தால் மேட்டு நிலப் பயிர்கள் மற்றும் நெற்செய்கை விவசாயமும் நாசமாக்கியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தென்னை, வாழை உட்பட பல பயிரினங்களையும் யானை துவம்சம் செய்துள்ளதாகவும், சைக்கிளில் வந்த விவசாயி ஒருவரை யான்சி தாக்க முற்பட்ட போது அவர் சைக்கிளைப் போட்டு விட்டு ஓடியதில் மயிரிழையில் உயிர் தப்பினார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கிராமத்தின் பிரதான வீதியில் யானை வேலி அமைத்தாலும் ஊருக்குள் படையெடுக்கும் யானைகளைக் கட்டுப்படுத்தி தங்களது உயிர்களை உடமைகளை பாதுகாக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

பெரும்போக நெற் செய்கை விதைத்து 45 நாள்களை கடந்துள்ள நிலையில் நெற்பயிர்ச் செய்கையையும் அவை அழித்துள்ளன எனவும் தெரிவிக்கின்றனர்.

அழிவுக்கான நஷ்ட ஈடுகளை கேட்டால் ஒரு ஏக்கருக்கு ரூபா 3000 முதல் 4000 வரை தருகின்றனர். விதை நெல் ஒரு ஏக்கருக்காக சுமார் 7000 ரூபாவாக உள்ளது.

தேர்தல் காலங்களில் மாத்திரம் வரும் அரசியல்வாதிகள் தற்போது உயிர் போன பின்பு தான் வருவார்களா எனவும் காட்டு யானைகளின் அச்சுறுத்தலுக்குள்ளான பிரதேச குடியிருப்பாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தங்களது பிள்ளைகளை வைத்து கொண்டு இரவு நேரங்களில் பீதியுடன் தூங்க வேண்டியுள்ளதாவும், பாடசாலைகளுக்கு அனுப்பவும் பயத்துடனான நிலை நிலவுவதாகவும் தெரிவிக்கின்றனர்.









# சாயி பாபா முத்திரை வெளியீடு

சத்ய சாயி பகவானின் ஜனன தின நூற்றாண்டை முன்னிட்டு, அஞ்சல் திணைக்கள முத்திரை பணியகம் ஞாபகார்த்த தபால் முத்திரையினை நேற்று சனிக்கிழமை, கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி நிலையத்தில் வெளியிட்டு வைத்தது.

சத்ய சாயி பாபா (இலங்கை) அறக்கட்டளையகத்தின் பிரதம அறங்காவலர் எஸ். என்.உதயநாயகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பெருந்தோட்ட மற்றும் சமூக உள்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ். துரைராஜா, மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பிரபா குமார் இரட்னம் மற்றும் தொழிலதிபரும் சமூக சேவையாளருமான தெ. முருகேசு, கொழும்பு மாநகர சபை உறுப்பினர் காயத்திரி விக்ரமசிங்ஹ ஆகியோர் முதல் நாள் தபாலுறையை பெற்றுக்கொண்டனர்.





















# உடுத்துறை மாவீரர் துயிலுமில்லத்தில் அஞ்சலி

**(பூ.லின்ரன்)**

வடமராட்சி கிழக்கு உடுத்துறை மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர் வாரத்தின் இரண்டாம்நாள் அனுஷ்டிப்பு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கலந்துகொண்ட போரா ளிகளின் பெற்றோர், உறவினர்கள். சமூக செயற்பாட்டாளர்கள் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர்.









# இன்றைய ராசி பலன்கள்- 23.11.2025




இன்று நீங்கள் தேவைகளை அறிந்து நடந்து கொள்வீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். உங்களின் சிறிய திட்டம் பெரிய வெற்றிக்கு வழி காட்டும்.

உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள். உங்களிடம் இன்று ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும்.

உங்கள் துணையுடன் தரமான நேரங்களை செலவழிப்பீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று சுதந்திரமான நிதிநிலை காணப்படும். இன்று பயனுள்ள சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது.




இன்று உங்கள் விருப்பங்களை மேம்படுத்திக் கொள்வீர்கள். வாய்ப்புகள் கிடைக்கும். அதை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறனை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் திறமைகள் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த முயல்வீர்கள்.

இன்று சுதந்திரமான நிதிநிலை காணப்படும். இன்று வளமான நாளாக அமையும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் ஏதும் இருக்காது. இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று நீங்கள் பதற்றம் நிறைந்து காணப்படுவீர்கள். இது உங்கள் பேச்சில் வெளிப்படும். பிரார்த்தனை மற்றும் மந்திர ஜெபங்கள் மன ஆறுதலை அளிக்கும்.

பணியில் கூடுதல்பொறுப்புகள் சுமக்க நேரும். வேலை சம்பந்தமான பயணம் காணப்படும்.இன்று உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி பணிகளைக் கையாள வேண்டும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க அகந்தைப் போக்கை கவனமாகக் கையாள வேண்டும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகமாக இருக்கும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும். உங்கள் மதிப்பு மிக்க பொருளை இழக்க நேரலாம். கவனமாக இருக்கவும். இன்று திருப்தியான மன நிலை இருக்காது. அது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. கவனமுடன் உங்கள் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் பதற்ற உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் வாக்குவாதம் எழும். இந்த நடத்தையை கைவிடுங்கள்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். சிறப்பாக திட்டமிடுவதும் அதனை செயலாற்றுவதும் இன்று வெற்றியை பெற்றுத் தரும்.உங்கள் தாயின் உடல் நலம் பற்றிய கவலை காணப்படும்.




இன்று அமைதி மற்றும் செழிப்பு காணப்படும் அனுகூலமான நாள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நன்மை அளிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளுக்கு பாராட்டு கிடைக்கும். சக பணியாளர்கள் ஒத்துழைப்பார்கள்.

உங்கள் தொடர்பாடல் மூலம் உங்கள் துணையிடம் நல்லுறவை ஏற்படுத்துவீர்கள்.

நிதிநிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. புதிய முதலீட்டுக்கான திட்டம் இன்று நீங்கள் மேற்கொள்ளலாம்.

உங்களிடம் காணப்படும் நேர்மறை ஆற்றல் காரணமாக இன்று ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும் நாள். சவால்கள் நிறைந்து காணப்பட்டாலும் அதனை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வீர்கள். பயணங்கள் செல்ல வாய்ப்புள்ளது.

உங்கள் பணிகளை ஒரு கொள்கையுடன் மேற்கொள்வீர்கள். அது வெற்றிக்கு வழிவகுக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாக நடந்து கொள்வீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

பயணம் மூலம் இன்று பண வரவு ஏற்படலாம். ஆன்மீக விஷயத்திற்காக செலவு செய்ய நேரலாம்.

இன்று உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




அதிக சிந்தனைகள் காரணமாக மனதில் குழப்பம் ஏற்படலாம்.இன்று வெற்றிகள் காண கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய முடியாதபடி சில தடைகள் ஏற்படும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.பணியிடத்தில் கடினமான சூழ்நிலையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் குறைந்த அளவு பேச்சு வைத்துக் கொள்ளுங்கள். உறவில் அமைதியின்மை ஏற்படாமல் இருக்க இது மிகவும் அவசியம்.

போதிய பணம் கையில் இருந்தாலும் அதனை நீங்கள் பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்ய இயலாது. வீண் செலவு ஏற்படும்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று மிதமான பலன்களே கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நேர்மறை எண்ணங்களுடனான அணுகுமுறை கொள்ள வேண்டும்.

கவனக் குறைவு காரணமாக பணியில் சில தவறுகளை நீங்கள் செய்ய நேரலாம். உங்கள் பொறுப்புகளை அறிந்து நடந்துகொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பாக மனம் திறந்து பேசுங்கள். இதனால் உறவுப் பிணைப்பு வலுப்படும். செலவுகள் அதிகரிக்கும். வீணான செலவுகள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

சளி மற்றும் இருமல் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள்- 23.11.2025




இன்று உங்கள் இலக்குகள் நிறைவேறும். என்றாலும் முறையாக திட்டமிட்டால் இன்னும் சிறபான பலன்களைக் காணலாம்.

பணியில் உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும். கூடுதல் ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். திருமண நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியாக நேரம் கழிப்பீர்கள்.

இன்று வலுவான நிதி ஆதாரங்களை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.




இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். உங்களிடம் உறுதியும் தைரியமும் காணப்படும். உங்கள் இலக்குகளை அடைவது இன்று எளிதாக இருக்கும்.

உங்கள் பணியில் வளர்ச்சி காண்பீர்கள். இன்று உங்களுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பழகுவீர்கள். இதன் மூலம் குடும்பத்தில் உள்ள பிரச்சினைகள் தீரும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகள் பூர்த்தி ஆகும். நீங்கள் சிறிய வகையிலான கடன்கள் வாங்குவீர்கள்.

ஆரோக்கியமான மனதின் காரணமாக தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். எனவே உற் சாகமாக ஆற்றலுடன் இருங்கள்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். உங்கள் இலக்குகளை அடைய கடின மாக உழைக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைவதற்கு அதைரியம் தடையாக இருக்கும்.

பணியில் கவனம் செலுத்த முடியாத படி பதட்டம் காணப்படும். அமைதியாக பணிகளை மேற்கொண்டால் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள் துணையுடனான கருத்து வேறுபாடு காரணமாக உறவில் அமைதியின்மை காணப்படும். இதனை சமாளிக்க வேண்டும்.

எதிர்பாராத செலவினங்கள் காணப்படும். உங்கள் நிதியை கவனமாகக் கையாள வேண்டும்.




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் மன ஆறுதலும் வெற்றியும் கிட்டும். இன்று வெற்றி காண யோசித்து செயல்பட வேண்டும்.

பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. பணியில் கவனம் செலுத்த உங்கள் மனதில் உள்ள தேவையற்ற எண்ணங்களை நீக்க வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவில் அமைதியின்மை காணப்படும். உங்கள் துணையுடன் அன்பாக நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று வரவு செலவு இரண்டும் காணப்படும். இன்று அதிக பண வரவுக்கான சாதகமான நாள் அல்ல.

அதிக உடல் உழைப்பு காரணமாக கால் வலி ஏற்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.



# 'நாட்டிய லஹரி' நிகழ்வு தெஹிவளையில்

கொழும்பு வெள்ளவத்தையில் இயங்கிவரும் 'பரதகலா வித்தகர்' திருமதி ஷாலினி வாகீஷ்வரனின் சின்மய கலாக்ஷேத்திரா மாணவர்கள் பெருமையுடன் வழங்கும் 'நாட்டிய லஹரி 2025' நிகழ்ச்சி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை, 25 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு தெஹிவளையில் அமைந்துள்ள எஸ்.டீ.எஸ்.ஜயசிங்க மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வின் பிரதமவிருந்தினராக நாட்டியகலாமந்திர் இயக்குனர் கலாசூரி திருமதி.வாசுகி ஜெகதீஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக கொழும்பு சைவமங் கையர் வித்தியாலய அதிபர் திருமதி .அருந்ததி இராஜவிஜயன், ஸ்ரீசதங்கை நர்த்தனாலயாவின் இயக்குனர் திருமதி. சாமுண்டீஸ்வரி சுந்தர் ஜெயராம் மற்றும் சிறப்பு விருந்துனர்களாக சண்முகம் பிள்ளை விஸ்வநாதன், கலாநிதி. அருணந்தி ஆரூரன், ரட்ணம் ரட்ணதுரை ஆகியோரும் கலந்து சிறப் பிக்கவுள்ளனர்.